செ.வெ. எண்: 350 நாள்: 19–06–2012

**<u>மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் பத்திரிக்கைச் செய்தி</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி தமிழகத்தின் நெல் வரத்து இருப்பு மற்றும் மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவை குறித்த ஆய்வுக் கூட்டத்தை 19.6.2012 அன்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், தமிழ்நாடு மாநில சேமிப்பு கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர், கூடுதல் காவல் துறை தலைவர் மற்றும் துறை அதிகாரிகள் மற்றும் துறையைச் சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரிசி இருப்பு ஆகியவற்றை ஆய்வு செய்யும்பொழுது மத்திய உணவுக் கழக கிடங்ககுளில் 8.78 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் 4.77 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவித்தார். தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கப்படும் அரிசியின் தேவை மாதத்திற்கு 3.30 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். ஆகவே தேவைக்கு அதிகமான அரிசி கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகையை, ரூ.3.20 கோடி செலவில் 8 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மின்னணு அட்டை மூலமாக வங்கி கணக்குகளில் வழங்கும்

திட்டம், ரூ.2,10,10,000 மதிப்பில் நெல் தூற்றும் இயந்திரங்கள் வாங்குவது குறித்தும், நியாய விலைக் கடைகளுக்கு 100 இடங்களில் சொந்தக் கட்டிடம் கட்டுவது குறித்தும், பறக்கும் படை பிரிவுகளுக்கு ரூ.30,34,000 செலவில் ஜீப்புகள் வாங்குவது குறித்தும், 7,800 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக 900 கிராமங்களில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு முகாம்கள் ரூ.1,31,00,000 செலவில் அமைப்பது குறித்தும், 500 மாணவர் நுகர்வோர் மன்றங்கள் அமைக்கும் சிறப்பு திட்டம் குறித்தும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு சலுகை வழங்குவது குறித்தும், புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கிடங்குகள் 3,000 மெட்ரிக் டன் அளவில் ரூ.170 இலட்சம் செலவில் அமைக்க உள்ளது குறித்தும், தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் 50 நேரடி கொள்முதல் நிலையங்கள் ரூ.12.50 கோடி செலவில் அமைப்பதும் குறித்தும், கிருஷ்ணகிரி, ஆத்தூர், வேலூர் மற்றும் மானாமதுரை ஆகிய இடங்களில் தலா 3,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிடங்குகளும், நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு, திருவாரூர் மாவட்டத்தில் நன்னிலம், வலங்கைமான், திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலகுண்டு, வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூர் ஆகிய இடங்களில் தலா 3,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய கிடங்குகள் ரூ.12 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ளது குறித்தும் விரிவாக ஆய்வு நடத்தினார்கள். மேலும் குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அண்மையில் மேற்கொண்ட கைப்பற்றுதல் குறித்தும், அரிசி மற்றும் அத்தியவசியப் பொருட்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்குத் தேவையான யுக்திகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 20 வருடங்களில் வரலாறு காணாத அளவில் இந்த ஆண்டு 24 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தரமான அரிசி அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுவதை மேலும் தீவிரமாக கண்காணிக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பருவமழை தாமதமாக துவங்குவது காரணமாக டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீரை சாகுபடிக்கு பயன்படுத்துவதற்காக 12 மணி நேர மும்முனை மின் விநியோகம் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழகத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தரமான அரிசி பொது மக்களுக்கு விலையில்லாமல் வழங்கப்படுவதால் அரிசி விலை உயர்வு குறித்து அண்மையில் சில நாளிதழ்களில் வந்துள்ள தகவல் உண்மைக்கு புறம்பான செய்தி என்றும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா. காமராஜ் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**